தமிழர் நினைவேந்தல் அகவம் – சுவிஸ்
Tamilar Remembrance Foundation - Swiss
Postfach 439, 4528 Zuchwil / www.trfswiss.com / trfswiss@gmail.com

# தமிழீழத் தேசிய மாவீரர் நினைவுப் பேச்சுப்போட்டி 2026

**5 வயதுப்பிரிவு**
**(01.01.2021 – 31.12.2021 வரையில் பிறந்தோர்)**

## என் தாய்மொழி தமிழ்

தமிழ்! தமிழ்! தமிழ்! சொல்லும் பொழுதே என் உள்ளம் துள்ளுகிறது. தமிழர் என்று பெருமை கொள்ளச் செய்கிறது.

தமிழ் எங்கள் உயிர். அது எங்கள் தாய்மொழி. உலக மொழிகள் பலவற்றின் தாய்மொழியும் அதுவே! பார் வியக்கும் சிறந்த இலக்கியங்கள் கொண்ட செம்மொழி.

தலைவர் மாமாவையும் அவர் வழிநடந்த பல்லாயிரம் வீரர்களையும் ஓரணியில் திரட்டியது எம் தமிழே! நாம் தமிழீழத் தாய்நாட்டை மீட்டு, ஆள்வோம். அன்று அரியணை ஏறுவாள் எம் தமிழ்த்தாய்! அதற்காக நாம் ஒன்றுபட்டு உழைப்போம்.

நன்றி
வணக்கம்